கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

<u>அ.வ.எண். 1/2019</u>

நாள். 28.11.2022 வா.சா.1 – திரு. மயில்ராஜன்

த/பெ. – திரு. ஆறுமுகம்

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் பொன்னாகுளத்தில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளும் பொன்னாகுளத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பொன்னாகுளத்தில் எவ்வளவு வீடுகள் உள்ளது என்றால் 80 வீடுகள் உள்ளது. நான் வேறு சமுதாயம் 1 முதல் 3 பிரதிவாதிகள் வேறு சமுதாயம் என்றால் சரிதான். இறந்துபோன ஆறுமுகம் நாடாரை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். பேசியுள்ளீர்களா என்றால் பேசியுள்ளேன். ரொம்ப வருடத்திற்கு முன்பு பேசியுள்ளேன். அவர் இறந்தது எல்லாம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். அவர் இறந்து எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் 22 வருடங்கள் இருக்கும்.

2) அவருக்கு அமிர்தகனி என்ற மனைவி உண்டு. அவருக்கும் அமிர்தகனிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பிள்ளைகள் என்றால் சரிதான். ஆறுமுகம் நாடார் உங்கள் தாயாரை 2வது திருமணம் செய்தது சம்பந்தமாக எந்தவித ஆவணங்களும் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வருடம் ஆறுமுகம் நாடாருக்கும் உங்கள் தாயார் சுப்பம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றதை பற்றி உங்கள் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். திருமணம் நடந்த வருடமாவது தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தாயார் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். உங்கள் தாயாரை இவ்வழக்கில் வாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆறுமுகம் நாடாருக்கு சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது என்றும் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றும் தெரியுமா என்றால் சர்வே எண். தெரியாது. ஆனால் ஊருக்கு மேற்கேயும், கிழக்கேயும் ஊரைச் சுற்றியும் நிலங்கள் இருந்தது.

3) ஆறுமுகம் நாடாருக்கு சொந்தமாக நிலங்கள் இருந்தது என்பதற்கு ஆவணங்களோ,

வருவாய்துறை ஆவணங்களோ நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்களுடைய பிறந்த தேதி தெரியுமா என்றால் 17.04.1974 ஆகும். வா.சா.ஆ.5 ஆவணத்தில் நீங்கள் பிறந்த தேதி என்ன என்று போடப்பட்டுள்ளது என்றால் 16.10.1972 என்று போடப்பட்டுள்ளது. உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிராதில் 5ம் பாராவில் 1972ம் வருடத்தில் தான் ஆறுமுகம் நாடார் சுப்பம்மாளை திருமணம் செய்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். ஆறுமுகம் நாடார் தோட்டத்தில் சுப்பம்மாள் வேலை பார்த்தார்கள் என்று கூறுகிறீர்கள் எவ்வளவு வருடமாக வேலை பார்த்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆறுமுகம் நாடார் என்ன வேலை செய்தார் என்றால் விவசாயம் தான் செய்து வந்தார் அவருடைய தோட்டத்தில் தான் விவசாயம் செய்து வந்தார்.

4) செட்டிகுளத்தில் முன்னால் ராஜ்யசபா மெம்பர் சௌந்தரராஜன் தோட்டத்தில் தான் விவசாயம் செய்து வேலை பார்த்து வந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆறுமுகம் நாடார் உயிருடன் இருக்கும் போது அவர்தான் உங்களுடைய தகப்பனார் என்றும், சுப்பம்மாளின் கணவர் என்றும் உரிமை பாராட்டி ஏதாவது செயல்கள் மேற்கொண்டீர்களா என்றால் இல்லை. வீட்டிற்கு போனதில்லை பேசியுள்ளேன். அவர் வீட்டின் திருமண விழாவிற்கு உங்களுக்கு அழைப்பிதழ் ஏதாவது வந்ததா என்றால் இல்லை. ஆறுமுகம் நாடார் இறக்கும் போது உங்களுக்கு 26 அல்லது 27 வயது இருக்கும் என்றால் சரிதான். அவர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார் என்றும் அப்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

5) அவர் இறந்த சமயத்தில் இறுதி சடங்குகளில் நீங்கள் பங்கேற்கவில்லை என்றால் சரியல்ல. நான் போயிருந்தேன். அவர்களுடைய வழக்கப்படி நீங்கள் அவருடைய இறுதி சடங்கில் சடங்குகள், சம்பிரதாயங்கள் நீங்கள் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் தாயார் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. சம்பிரதாயங்கள் எதுவும் செய்யவில்லை ஆனால் இறப்பில் கலந்து கொண்டார். அவருடைய உடல் எங்கு அடக்கம் செய்ய்பபட்டது என்றால் அவருடைய குடும்பசொத்தில் அடக்கம் செய்யப்பட்டது. நீங்களும் ஆறுமுகம்

நாடாரின் மகன் தான் என்றும் ஊர்மக்கள் முன்பு ஏதாவது கோரிக்கைகள் வைத்தீர்களா என்றால் வைக்கவில்லை. நீங்களும் உங்கள் தாயாரும் ஆறுமுகம் நாடாரின் இறப்பில் கலந்துகொள்ளவில்லை என்றும் வழக்கிற்காக நீங்கள் பொய்சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

6) நீங்கள் தாக்கல் செய்த பிராதில் ஆறுமுகம் நாடாரின் இறப்பில் நானும் எனது தாயாரும் கலந்துகொண்டோம் என்று கூறவில்லை என்றால் அதற்கு சரியான ஆதாரங்கள் நிரூபிக்கமுடியவில்லை என்பதால் நான் கூறவில்லை. ஆறுமுகம் நாடார் தான் உங்கள் தகப்பனார் என்ற விபரத்தை 47 வருடங்களுக்கு பின்பு தான் உரிமை கொண்டாடி வருகிறீர்கள் என்றால் சரியல்ல. நான் 8ம் வகுப்பு முடித்து மங்களூர் சென்று விட்டேன். பின்பு 27 வயதில் ஐயப்பனுக்கு நான் மாலை போடும்போது  ஆறுமுகம் நாடார் என்னுடைய வீட்டிற்கு வந்து கட்டெல்லாம் தூக்கி விட்டார். அப்போது தான் நான் உறுதிப்படுத்திக்கொண்டேன். நீங்கள் உறுதிப்படுத்திய பின்பு தான் அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் உரிமை கொண்டாடினீர்களா என்றால் என்னுடைய திருமண அழைப்பிதழில் தகப்பனார் என்று பெயரிட்டேன். அந்த திருமண அழைப்பிதழை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) ஆறுமுகம் நாடார் உங்கள் தகப்பனார் என்று போட்டு திருமண அழைப்பிதழ் அச்சடிக்கவில்லை என்றும் அதனால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆறுமுகம் நாடார் இறந்தபின்பு வாரிசு சான்றிதழ் விண்ணப்பித்து மற்றும் பெற்றதை பற்றி தெரியுமா என்றால் அப்போது எனக்கு தெரியாது. எப்போது உங்களுக்கு தெரியவந்தது என்றால் 2 வருடங்களுக்கு முன்பாகும். நீங்களும் ஆறுமுகம் நாடாரின் வாரிசு சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கவும் செய்யவில்லை 1 முதல் 3 பிரதிவாதிகள் விண்ணப்பித்ததும் தெரியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.